**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.27/2020** |
| Sessions : | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | | Prosecution : | **P.W. 9** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| **Name :** | முகமதுசித்திக் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **06.03.2026**

**1வது எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் ஏற்பு. 2, 4எதிரிகள் ஆஜர் படுத்தப்பட்டார்கள். 3வது எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் பெரம்பலூரில் குடியிருக்கிறேன். ஓட்டலில் மாஸ்டராக வேலைசெய்கிறேன். வழக்கில் இறந்துபோன வீரமணிகண்டனை எனக்கு தெரியும். வழக்கு எதிரிகளை நான் பார்த்துள்ளேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் பழையபஸ்டாண்ட் அருகில் உள்ள GH எதிரில் உள்ள BC Hostelலில் கொலை நடந்தது. அப்போது நான் உடன்இருந்தேன். வீரமணிகண்டனை கொலைசெய்துவிட்டார்கள். அப்போது இரவு சுமார் 07.00, 08.00 மணி இருக்கும். இருட்டாக இருந்தது. எதிரிகள் தான் சம்பவத்தில் ஈடுபட்டார்களா என்று எனக்கு முகம் தெரியவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

## அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

எனக்கு சீட்டு ஆடும் பழக்கம் உண்டு. 07.06.2020ம் தேதி நான், முகமது ஈசாக், ராஜா, சந்தோஷ்குமார், லோகநாதன் இறந்துபோன வீரமணிகண்டன், கருணாநிதி ஆகியோர்கள் BC Hostelலில் சீட்டு விளையாடிகொண்டிருந்தோம் என்றால் சரிதான். அப்போது சுமார் இரவு 08.00 மணி இருக்கும். லைட் வெளிச்சத்தில் சீட்டு விளையாடினோம் என்றால், லைட் வெளிச்சம் இல்லை, செல்போன் லைட் வெளிச்சத்தில் விளையாடினோம். ஆஸ்டல் எதிர்புறத்தில் அரசு மருத்துவமனை உள்ளது என்றால் எதிர்புறம் கொஞ்சம் முன்னாடி உள்ளது. ஆஸ்டலுக்கு வடக்கே கொஞ்சம் தள்ளி அங்காயிஅம்மன்கோவில் உள்ளது. பொதுவாக அந்த கோவிலுக்கு மக்கள் வந்துபோய் கொண்டிருப்பார்கள் என்றால் சரிதான். அந்த கோவிலுக்கு போகும் வழியிலும் அரசு மருத்துவமனை எதிரிலும் உயரமான மின்கம்ப விளக்கு உள்ளது என்றால் சரிதான். நாங்கள் சீட்டு விளையாடிகொண்டிருக்கும்போது எதிரிகள் அங்கு வந்து வீரமணிகண்டனிடம் டிஸ்பிளை போன செல்போனை கொடுத்துவிட்டாய் என்று கூறி தகராறு செய்தார்கள் என்றால் எதிரிகள் தான் வந்தார்களா என்று எனக்கு தெரியவில்லை. வீரமணிகண்டன் எனக்கு நீண்டநாள் நண்பர். வீரமணிகண்டனுக்கு வழக்கு எதிரிகள் நண்பர்கள் என்றால் சரிதான். வீரமணிகண்டனுடன் பழக்கம் இருந்தபோது எதிரிகளை எனக்கு தெரியும். எல்லோரும் ஒன்றாக தான் வருவோம், போவோம். ஏற்கனவே அறிமுகமான எதிரிகளை இருட்டில் பார்த்தாலும் எனக்கு தெரியும் என்றும், தற்போது இருட்டில் தெரியவில்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் நான் அப்போது நல்ல போதையில் இருந்தேன். வீரமணிகண்டனிடம் எதிரிகள் பிரச்சனை செய்தபோது பிரச்சனையை பேசி முடித்துகொள்ளலாம் என்று நான் சொன்னதாக போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. பேசிக்கொண்டிக்கும்போதே எதிரி பார்த்தா (எ) பார்த்திபன் அரிவாளை எடுத்து வீரமணிகண்டனின் தலையில் வெட்டியதாக போலிசார் விசாரைணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் யாரோ ஒருநபர் வெட்டியதாக சொன்னார். வீரமணிகண்டன் அப்போது தப்பித்து செல்வதற்காக காம்போண்ட் சுவரை ஏறிகுதித்தார் என்றும், அப்போது எதிரி டால்டாகண்ணனை அரிவாளை வாங்கி அவர் தலையில் வெட்டினார் என்றால் சரியல்ல. நான் டால்டாகண்ணனை பார்க்கவில்லை. வீரமணிகண்டன் காம்போண்ட் சுவரை ஏறிகுதித்தபின்னர் எதிரி முருகானந்தம் பட்டா கத்தியால் கழுத்தை அறுத்ததாக போலிசார் விசாரணையில் நான் சொன்னேன் என்றால் முருகானந்தம் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை, யாரோ அறுத்தாக சொன்னேன். அப்போது நாங்கள் சத்தம்போடவும் எதிரி அய்யனார் பைக்கில் வந்தார் என்றும், அப்போது எதிரிகள்

அந்த பைக்கில் ஏறி தப்பித்து சென்றுவிட்டதாக போலிசார் விசாரைணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. இருட்டில் யாரோ நான்குபேர்கள் தெறித்துஓடியதாக போலிசார் விசாரணையில் சொன்னேன். வீரமணிகண்டன் ரத்த வெள்ளத்தில் கிடக்கும்போது ஊர்காரர்கள் வந்துவிட்டார்கள் என்றும், பின்னர் மருத்துவமனைக்கு அவரை கொண்டுசென்றார்கள் என்றால், வீரமணிகண்டன் கழுத்தை அறுத்தவுடன் நான் காவல்நிலையம் சென்று தகவல் சொல்லபோய்விட்டேன். எதிரிகள் என்நண்பர்கள் என்பதால் தற்போது அவரை வழக்கில் இருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1, 2, 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

BC Hostel கேட் அன்று மூடிதான் இருந்தது. BC Hostel சுற்றி காம்போண்ட்சுவர் உயரமாக இருக்கும் என்றால் சுமார் 4 1/2 உயரம் இருக்கும். சீட்டுவிளையாடும் இடத்தில் பொருட்கள் ஏதாவது இருந்ததா என்றால் குவாட்டர் பாட்டில் உடைந்து கிடந்தது.

**<u>4வது எதிரி தரப்புகுறுக்கு விசாரணை</u>**

இல்லை

**<u>மறுவிசாரணை</u>**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.